தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!

நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)

நேரம்	ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள்	இடம்
காலை 10.30	தாராபுரம் நகரம்	தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ'
மாலை 5.00	தாராபுரம் நகரம்	உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம்

தேர்தல் பணிக்குழு
101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் நேற்று (26.09.2026) சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஊர் ஊராகச் சென்று முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு தலைமையில் கழகத்தினர் தீவிர வாக்குச் சேகரித்தனர். கழக துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி முன்னிலை வகித்தார். மேயர் பிரியாராஜன், தாயகம் கவி, உள்ளிட்ட நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தல்: க.பொன்முடி – தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை!

பி.கே.சேகர்பாபு தலைமையில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்குச் சேகரிப்பு!

மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் 10 பாகங்களில் ஆதரவு திரட்டினர்!

மதுராந்தகம், செப்.27- முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் முன்னிலையில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் - சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 10 பாகங்களுக்கு உட்பட்ட 12 இடங்களில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்ச்சி சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் இ.பரந்தாமன், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 7, 9, 33, 34, 35, 36, 37, 38, 57, 58 ஆகிய 10 பாகங்களில், 26.09.2026 சனிக்கிழமை வாக்கு சேகரித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் ஆகியோர் முன்னிலையில், மதுராந்தகம் வடக்கு ஒன்றியச் செயலாளர் சத்திய சாய்நாதன் மேற்பார்வையில் இந்த வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

காலை 12.00 மணியளவில் தொடங்கிய வாக்கு சேகரிப்பில், முதலில் கொளத்தூர் கிழக்கு-மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் பாகம் எண் 7க்கு உட்பட்ட புழுதிவாக்கம் ஊராட்சியில், புழுதிவாக்கம் ஊர் பகுதி மற்றும் புழுதிவாக்கம் கூட்ரோடு ஆகிய இரண்டு இடங்களில் வாக்கு சேகரிக்கப் பட்டது.

மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் அண்டவாக்கம் ஊராட்சி, பாகம் எண் 38க்கு உட்பட்ட செந்தமிழ் நகரிலும்;

தொடர்ந்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர், அம்பத்தூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்டோ ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றும் பாகம் எண் 36க்கு உட்பட்ட சித்தாலமங்கலம் மாரியம்மன் கோவில் அருகிலும்;

எழும்பூர் வடக்கு-தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் அண்டவாக்கம் ஊராட்சி, பாகம் எண் 37க்கு உட்பட்ட அண்டவாக்கம் ஊர் பகுதியிலும்;

மாவட்ட வழக்கறிஞர் அணி பொறுப்பேற்று பணியாற்றும் புதுப்பட்டு ஊராட்சி, பாகம் எண் 58க்கு உட்பட்ட பசும்பூர் பகுதியிலும் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

வில்லிவாக்கம் கிழக்கு-மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் புதுப்பட்டு ஊராட்சி, பாகம் எண் 57க்கு உட்பட்ட புதுப்பட்டு பேருந்து நிலையம் அருகிலும்;

இவ்வாறு காலை 12.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை 7 இடங்களில் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணியளவில், அம்பத்தூர் வடக்கு-தெற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் வையாவூர் ஊராட்சி, பாகம் எண் 33க்கு உட்பட்ட வையாவூர் மெயின் ரோடு பெட்ரோல் பங்க் அருகிலும்;

துறைமுகம் கிழக்கு-மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாணவர் அணி மற்றும் விவசாய அணி ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றும் வையாவூர் ஊராட்சி, பாகம் எண் 35க்கு உட்பட்ட மாம்பட்டு பகுதியிலும்;

திரு.வி.க.நகர் பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் வையாவூர் ஊராட்சி, பாகம் எண் 34க்கு உட்பட்ட வையாவூர் புளியமரம் அருகிலும்;

துறைமுகம் கிழக்கு-மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் பொறுப்பேற்று பணியாற்றும் குன்னங்குளத்தூர் ஊராட்சி, பாகம் எண் 9க்கு உட்பட்ட குன்னங்குளத்தூர் பிள்ளையார் கோவில் அருகிலும்;

தலைமைச் செயற்குழு உறுப்பினர், அம்பத்தூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்டோ ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றும் சூரை ஊராட்சி, பாகம் எண் 36க்கு உட்பட்ட சூரை அம்மிணி அம்மன் கோவில் அருகிலும் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

இவ்வாறு மாலை 5 இடங்கள் உட்பட, காலை மற்றும் மாலை சேர்த்து மொத்தம் 12 இடங்களில் வாக்கு சேகரிப்பு நடைபெற்றது.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி, அ.வெற்றிழகன், ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,ஏ.பி. பூர்ணிமா, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், கே. சந்துரு, சி.மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் ஐசி எப். வ முரளிதரன், எ.நாக ராசன், சொ.வேலு, வி. சுதாகர், டி.எஸ்.பி.ராஜ கோபால், எம்.டி.ஆர். நாக ராஜ்,செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, எஸ். ராஜசேகர், சரிதா மகேஷ் குமார்,,சுதா தீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், நா. ரஞ்சித் விஜயாலயன், இரா வீரமணி, எல் பி எஃப் மோகன், கு. கிருஷ்ணமூர்த்தி, லண்டன் க. முருகன் மற்றும் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள்,அந்தந்த பாகங்களுக்கு உட்பட்ட உள்ளூர் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட பல்வேறு அணிகள் மற்றும் பகுதி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



"தாங்கள் விரும்பிய வேறு கல்லூரியில் இடம் கிடைத்து மாணவர்கள் சேர நினைத்தால், முதலில் சேர்ந்த கல்லூரிக்குச் செலுத்திய கல்விக் கட்டணமும், மாற்றுச் சான்றிதழும் (TC) காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும்" எனக் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் பயனடைந்த திருச்சியைச் சேர்ந்த மாணவி ராஜேஸ்வரி நேற்று (26.09.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தார். கோவில் திருமாளம் தட்சிணாமூர்த்தி அவர்கள் மற்றும் மாணவியின் பெற்றோர் உடன் உள்ளார்கள்.

வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் எழுதிய

"சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன் 'நூல்'!

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டார்!

வேலூர், செப்.27- வி.ஐ.டி. பல்கலைக்கழகம் மற்றும் நாவலர் செழியன் அறக்கட்டளை இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் எழுதிய "சாதனைச் சகோதரர்கள் நாவலர் - செழியன்" என்ற நூலை சிறப்பு அழைப்பாளராக கழகப் பொதுச்செயலாளர், துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இரா.சபாபதி மோகன்

வி.ஐ.டி. பல்கலைக்கழக துணைத் தலைவர் ஜி.வி.சங்கர், வேலூர் மாநகர மேயர் திருமதி. சுஜாதா,

கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.வுக்கு எந்தத் தொடர்பும் இல்லை!

இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது!

காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

வேலூர், செப்.27- இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என காட்பாடியில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்திநகரில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பா.ஜ.க.,வை எதிர்த்ததால் மு.க.ஸ்டாலின், பினராயி விஜயன், மம்தா ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர் என்று எஸ்.ஐ.ஆர் விவகாரம் தொடர்பாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜித் குற்றச்சாட்டு வைத்திருக்கிறார்.

இந்த விவகாரம் தற்போது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. இதில் தலைமை தேர்தல் ஆணையரை மாற்ற வேண்டும். மம்தா பானர்ஜி, பிரனாயி விஜயன், மு.க.ஸ்டாலின் ஆகிய தலைவர்கள் எந்த ஊரிலும் தோற்பதற்கு வாய்ப்பே கிடையாது.

எங்களைப் போன்றவர்கள் எல்லாம் குறி வைத்து தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் தேர்தல் கமிஷனரை வீட்டுக்கு அனுப்புறது தான் முறை.

எங்கள் ஆட்சியில் மின்சாரம் சரியாக உள்ளது என்றுதான் ஆளும் கட்சி அமைச்சர்கள் சொல்வார்கள். சாதாரண குடும்பங்களில் மின்சாரம் எவ்வளவு துண்டிக்கப்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

ஜெம் வீரமணி வழக்கில் தி.மு.க.,வை எப்படி குறை சொல்ல முடியும்? ஜெம் வீரமணிக்கு தி.மு.க., ஒன்றும் வக்காலத்து வாங்கவில்லையே.. யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். சட்டம் தன் கடமையை செய்திருக்கிறது. யாராயிருந்தாலும் தண்டிக்கபட வேண்டியவர்கள். ஜெம் வீரமணி விவகாரத்தில் தி.மு.க.,வுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று எல்லோரும் சொல்லி விட்டோம்.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி, தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்று சொல்லியதை அடுத்து ராகுல் காந்தி அதையே முன்னெடுத்து இருக்கிறாரே என்று கேட்கிறீர்கள். கட்சிக்கு அப்பாற்பட்ட ஒன்று இது. இதை எல்லோரும் ஒன்று சேர்ந்து தான் செய்ய வேண்டும். கரப்பான் பூச்சி மட்டுமே செய்ய வேண்டும் என்று அல்ல. எல்லா பூச்சியும் சேர்ந்துதான் செய்யணும்.

எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் ஆதியிலேயே இது சரியில்லை என்று தி.மு.க., சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது. இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஆயிரம் முறை பேசி இருக்கிறார். எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் குறைபாடு உண்டு.

இடைத்தேர்தலில் 2 தொகுதிகளிலும் தி.மு.க.,வின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.